[21st April 1959

the question carefully in consultation with the Collector of Tanjore and the Board of Revenue, the Government decided that it was not necessary to extend the Act.

SRI C. MUTHIAH: திருவாரூர் நகர சபை பல மனுக்கள் கொடுத்திருந்தும் கலெக்டர், ரெவினியூ போர்ட் அப்படி இல்லை என்று சொல்வதையும் அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டதா. அப்படி இல்லாமல் அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படி அரசாங்கம் உத்தரவிடுமா ? மாகாணம் பூராவும், முனிசிபல் நகரங்கள் பூராவும் அதை விஸ்தரிக்க உடனடியாக என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இதில் ஒரு சாராருக்கு சந்தோஷம் வருவதும் மற்றொரு சாராருக்கு துக்கம் வருவது என்பதும் சகஜம்தான். கலெக்டர் இதைப்பற்றி பரிசீலனை செய்து அது அவசியம் இல்லை என்று சொல்லுகிறார். மேலும் பஞ்சாயத்தும் இதைப்பற்றி பரிசீலனை செய்து அவசியம் இல்லை என்று சொல்லி இருக்கிறது. ஏதோ ஒரு அரசியல் கட்சி மாத்திரம் இது வேண்டும் என்று முறையிட்டது. அதைப்பற்றியும் பரிசீலனை செய்து அது வேண்டாம் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

Supply of soda ash to washermen

* 47 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have recently received any representation from the Washermen Association regarding the scarcity of "Soda Ash" and the difficulties experienced by them: and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) The State Trading Corporation have been requested to allot every month a quota of 100 tons of soda ash for distribution to the Washermen Association in the State through the stockists of the Corporation. The Washermen Associations will obtain the quantity allotted to them through the stockists of the State Trading Corporation on production of permits issued by the Assistant Directors of Industries in the Districts.

SRI C. R. RAMASWAMI: Sir, are the Government aware that in the last two months there has practically been no supply of washing soda, and that the washermen have not received any washing soda at all?

THE HON. SRI R. VENKATARAMAN: That is not wholly true. But there is shortage of washing soda.

21st April 1959]

SRI K. SATTANATHA KARAYALAR : மொத்தம் எவ்வளவு வாஷிங் சோடா இந்த மாகாணத்திற்குத் தேவைப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதில் எந்த அளவுக்கு இந்த மாகாணத்திற்குக் கிடைக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Washing soda is used for several purposes. But this question relates only to washing soda required by the washermen. So far as the washerman are concerned, from requests received, about 150 tons of washing soda would be required for a month.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, what steps have the Government taken to make up the shortage so far as washing soda is concerned. Have they taken any steps?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. We invite private industrialists to come forward and start chemical industries.

SRI V. K. KOTHANDARAMAN : போதுமான அளவு இல்லாத காரணத்தால் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லக் கூடிய நேரத்தில் எவ்வளவு கேட்டாலும் கிடைப்பது இல்லை. 10 அல்லது 11 அணா என்று விற்கப்பட்டவை இப்பொழுது 2½ ரூபாயாக விற்கப்படுகிறது. இதை குறைந்த விலைக்கு விற்பதற்கும் வேண்டிய அளவில் கிடைப்பதற்கும் மேலும் அதிகப்படியாக கிடைப்பதற்கும் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : யார் யாருக்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறது என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கோட்டாவை கடைகளில் கொண்டு போய் விற்பதால் அதிகப்படியான விலைக்கு அங்கே விற்கப்படுகிறது. அப்படி விற்பதையும் அதிகப்படியாக விற்பதையும் தடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். கோட்டா பிரகாரம் விற்று எல்லோருக்கும் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கோட்டா பிரகாரம் வாங்கி அதை கடையில் விற்று வருவதால் அதிகப்படியான விலைக்கு விற்கப் படுகிறது. கோட்டாப்படி வாங்குகிறவர்கள் அதிகப்படியாக வெளியில் விற்கிறார்கள். அதைத் தடுக்கவேண்டும்.

SRI K. SATTANATHA KARAYALAR : சமீபத்தில் Import liberaliazation பிரகாரம் மத்திய சர்க்காரிலிருந்து வாஷிங் சோடா தருவிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது, அதை வைத்துக் கொண்டு இந்த நெருக்கடியை சமாளிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : I have no information with regard to the import policy.